கடலூர் மத்தியசிறை கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.
முன்னிலை - ஆ.முருகேசன், எம்.ஏ., எம்.எல்.

எண். 4009/பொ.1/2011. நாள். 06.02.2014.

பொருள்- சிறைகள் - மத்தியசிறை, கடலூர் - திரு.கே.எம்.அபூபக்கர், பதிவுரு எழுத்தர் (தற்போது மத்தியசிறை, சேலம்) என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை-
1) கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறைத் தலைவர் செயல்முறையாணை எண்.52266/இஎஸ்.2/2005-1, நாள்.15.03.2011.
2) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.4009/பொ.1/11, நாள்.30.03.2011.
3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.7077/பொ.1/13, நாள்.20.08.2013.
4) கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர் குறிப்பாணை எண்.520805/இஎஸ்.2/2013, நாள்.19.12.2013.

-----

கண்காணிப்பாளர் அலுவலகம் 22 MAR 2014 மத்திய சிறை, சேலம்-7

கோபிசெட்டிப்பாளையம் நன்னடத்தை அலுவலர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.கே.முகம்மது என்பவர் 03.12.1985 அன்று பணிக்காலத்தில் காணாமல் போய்விட்டதை தொடர்ந்து இவர் மரணமடைந்துவிட்டதாக நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டதால் திரு.கே.முகமது என்பவரின் மகன் திரு.கே.எம்.அபூபக்கர் என்பவரை கருணை அடிப்படையில் கடலூர் மத்திய சிறையில் முற்றிலும் தற்காலிக பதிவுரு எழுத்தராக (Record Clerk) நியமனம் செய்து பார்வை 1-ல் காணும் கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறைத் தலைவரால் ஆணையிடப்பட்டது. இதனை தொடர்ந்து திரு.கே.எம்.அபூபக்கர் என்பவரை கருணை அடிப்படையில் 30.03.2011 முதல் கடலூர் மத்திய சிறையில் முற்றிலும் தற்காலிக பதிவுரு எழுத்தராக (Record Clerk) பணி நியமனம் செய்து பார்வை 2-ல் காணும் ஆணையின்படி ஆணையிடப்பட்டது. இவரது பணியினை வரன்முறைபடுத்துவது தொடர்பாக மேற்படி பதிவுரு எழுத்தரின் கல்வி தகுதி சான்றின் உண்மை தன்மை அறிக்கை சரிப்பார்க்கப்பட்டு பெறப்பட்டது.

மேற்காணும் பதிவுரு எழுத்தர் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர் என்பதால், இவர் பணியில் சேர்ந்த நாளான 30.03.2011 முதல் பணிவரன் முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறைத் தலைவரை கோரப்பட்டது.

...2.

இந்நிலையில் திரு.கே.எம்.அபூபக்கர், பதிவுரு எழுத்தர் பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி சேலம் மத்தியசிறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதனை தொடர்ந்து பார்வை 4-ல் காணும் கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர் குறிப்பாணையில் தமிழ்நாடு பொது சார்நிலைப்பணி, சிறப்பு விதிகள், விதி எண்.3 மற்றும் பிற்சேர்க்கையின்படி, பதிவுரு எழுத்தர் பதவிக்கு கண்காணிப்பாளரே நியமன அலுவலர் என்பதால், இவரது நியமன நேர்வில், சிறப்பு விதிகளுக்கு எவ்வித விதித்தளர்வும் தேவையில்லாததாலும், இப்பணியிடம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் இல்லாத காரணத்தாலும், மேற்படி பணியாளரின் பணியினை கண்காணிப்பாளரே வரன்முறை செய்துகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி திரு.கே.எம்.அபூபக்கர், பதிவுரு எழுத்தர் (தற்போது மத்தியசிறை, சேலம்) பணியில் சேர்ந்த நாளான 30.03.2011 முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. மேலும் பணிவரன்முறை செய்த நாளான 30.03.2011 முதல் மூன்றாண்டு கால தொடர் பணிக் காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

30.3.11
29.3.13
21.8.13

6/4/11
சிறை கண்காணிப்பாளர்,
மத்தியசிறை, கடலூர்-4.

பெறுநர்
திரு.கே.எம்.அபூபக்கர், முன்னாள் பதிவுரு எழுத்தர், மத்தியசிறை, கடலூர்.
(தற்போது மத்தியசிறை, சேலம்.)

நகல்- சிறை கண்காணிப்பாளர், மத்தியசிறை, சேலம்.
(மேற்படி பதிவுகளை திரு.கே.எம்.அபூபக்கர், பதிவுரு எழுத்தரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது)

நகல்- நேர்முக உதவியாளர் / அலுவலக மேலாளர்.
நகல்- பணிப்பதிவேடு.
நகல்- கண்காணிப்பாளர் ஆணைப்புத்தகம்.